III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.288/2019

Deposition of witness for the Plaintiff/PW4
Respondent solemnly by Thiru.P.Kothandaraman, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 27-11-2024

| | | | |
|---|---|---|---|
| Name | : P.Anandan @ Premanandam | Village | : |
| Father's Name | : Gondaiah | Calling | : |
| Age | : | Taluk | : |

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் மூன்றாம் தரப்பினர். நான் சொல்லக் கூடிய சங்கதிகளை சத்திய பிரமாணம் செய்து எழுத்து பூர்வமாக தாக்கல் செய்கிறேன். அதை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். மேலும் எனது தரப்பில் 5 ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன். எனது ஆதார் அட்டையின் நகல் .(அது வா.த,சா.29 ஆக குறியீடு செய்யப்படுகிறது). எனது வாக்காளர் அடையாள அட்டையின் நகல் (அது வா.த,சா.30 ஆக குறியீடு செய்யப்படுகிறது).. எனது ஓட்டுநர் உரிமத்தின் நகல் (அது வா.த,சா.31 ஆக குறியீடு செய்யப்படுகிறது).. 14.09.2011 தேதியிட்ட பாக்கிய லட்சுமிக்கு நான் எழுதி கொடுத்த வாடகை ஒப்பந்த பத்திரம் (அது வா.த,சா.32 ஆக குறியீடு செய்யப்படுகிறது).. அசல் வழக்கு எண்.321/2010 ன் வழக்குரையின் நகல் (அது வா.த,சா.33 ஆக குறியீடு செய்யப்படுகிறது).. (வா.த,சா.33 செராக்ஸ் நகல் என மேற்கோள் காட்டி பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் செய்யும் ஆட்சேபனை பதிவு செய்யப்படுகிறது.) அவற்றின் விவரங்கள் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அது வா.த,சா. ஆக குறியீடு செய்யப்படுகிறது). நான் இந்த வழக்கில் கேட்டுள்ளபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.